

அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் ஊராட்சி, அன்னலட்சுமி இராஜபாண்டியன் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அரியலூர் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பித்திடும் வகையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றத் பேரவை அரசு உறுதிமொழி குழுவின் தலைவர் த.வேல்முருகன் மற்றும் குழுவின் உறுப்பினர்களான இரா.அருள் , ஏ.நல்லதம்பி, எம்.கே.மோகன் .எஸ் ஜெயக்குமார் ஆகியோர் குன்னூர் அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு வகைகளின் தரத்தினை உட்கொண்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு உட்பட பலர் உள்ளனர்.

### நாகை மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பேச்சுப்போட்டி!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!



நாகை, ஆக. 25 -

முத்தமிழ்றிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா முன்னிட்டு பேச்சுப்போட்டி நடை பெறுவதையொட்டி நாகை மாவட்டக் கழக செயலாளாரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவருமான என். கௌதமன் அறிக்கை விடுத்துள்ளார்.

நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப் படி கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின் படி கழக இளைஞரணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பேச்சுபோட்டி இன்று (25.08.2024) (ஞாயிறு) காலை 8.00 மணியளவில் நாகை டி.பி.ஜி. திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் (நாகை மாவட்ட செயலாளர்) நான் தலைமையேற்று நிகழ்ச்சியினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறேன். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பி.என். கார்த்திக் வரவேற்புரையாற்றுகிறார். மாநில இளைஞரணி துணை செயலாளர் என். இளையராஜா மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி. எஸ்.அசோக், கோ. தாமோதரன், கே. சுரேஷ், த.கலையரசன், எஸ்.டேனியல் சத்யா, கு.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இதில் நடுவர்களாக முனைவர் சபாபதிமோகன், மதிவதனி, பன்னிர் பெருமாள் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்

பேச்சுப் போட்டிக்கு பதிவு செய்துள்ள மாணவ மாணவியர் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்கின்றனர் அதுசமயம் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள் . ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக,செயலாளர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய நகர , பேரூர் இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஈரோடு தெற்கு - வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப்போட்டி - இன்று நடைபெறுகிறது!

## மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஜெ.திருவாசகம் – அ.திருவேங்கடம் அறிக்கை!

ஈரோடு, ஆக. 25 -

ஈரோடு தெற்கு, வடக்கு மாவட்ட கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் தெற்கு ஜெ.திருவாசகம், வடக்கு அ.திருவேங்கடம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்ட அணியின் சார்பில் இன்று (25.8.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணியளவில் ஈரோடு இரயில் நிலையம் அருகில் மணல்மேடு வீதியில் உள்ள ஈரோடு மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயம், தளபதி மன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், பொன். முத்துராமலிங்கம், கவிஞர் சல்மா, அமுதரசன், தூத்துக்குடி சரத்பாலா, சுகுணா திவாகர் ஆகிய நடுவர்கள் முன்னிலையில் “என் உயிரினும் மேலான” கலைஞர் நூற்றாண்டு பேச்சு போட்டி நடைபெறவுள்ளது.

இதில் பேச்சுப்போட்டிக்கு முன்பதிவு செய்துள்ளவர்கள் மற்றும் விருப்பமுள்ளவர்கள் முன் பதிவு செய்ய தவறியவர்கள் கலந்து கொள்ளலாம். எனவே இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு:

★காலை மற்றும் மதிய உணவு பேச்சு போட்டி நடைபெறும் அரங்கில் வழங்கப்படும்.

★பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் நினைவு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

★பேச்சுப் போட்டியில் நடுவர்களால் தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு ஊக்க தொகை வழங்கப்படும்.

★பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள வருபவர் 2 பாஸ்போர்ட் புகைப்படம் கொண்டு வரவும்.

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

### பெரம்பலூர் மாவட்டம்

# வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த வீ.ஜெகதீசன் அவர்கள், மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ந.ஜெகதீஸ்வரன்**, (1/5, இனாம் அகரம், திருவாளந்துறை அஞ்சல், வேப்பந்தட்டை தாலுகா, பெரம்பலூர் மாவட்டம் - 621117) அவர்கள் வேப்பந்தட்டை கிழக்குஒன்றியக்கழகப்பொறுப்பாளராகநியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# திருச்செங்கோடு நகராட்சியில் டெங்கு ஒழிப்பு பணி தீவிரம்!

## நகர மன்றத் தலைவர் நளினி சுரேஷ்பாபு ஆய்வு!

நாமக்கல், ஆக. 25 –

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகராட்சி 33 வார்டுகளில் ஆணையாளர் சேகர் துப்புரவு அலுவலர் வெங்கடாசலம் ஆகியோர் முன்னிலையில் நகர்மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு டெங்கு ஒழிப்பு பணிகளை ஆய்வு மேற்கொண்டு பரப்புரையாளர்கள் மேற்கொள்ளும் பணிகள் குறித்து அறிவுரை வழங்கினார்.

மழைக்காலம் நெருங்குவதால் நகராட்சி டெங்கு ஒழிப்பு பரப்புரையாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு வார்டு பகுதிகளுக்கும் நகராட்சி ஊழியர்களுடன் சென்று அந்தந்த பகுதிகள் சுத்தமாக உள்ளதா எனவும், கொசு மருந்து அடித்தல் என சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் எடுத்துரைத்தனர். மேலும் பொதுமக்கள் நகராட்சி பணிக்கு வரும் பரப்புரையாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து அரசு மருத்துவமனை பகுதியில் புகை மருந்து அடிக்கப்பட்டது,

இந்நிகழ்ச்சியில் நகர்மன்ற உறுப்பினர்கள் திவ்யா வெங்கடேஸ்வரன், புவனேஸ்வரி உலகநாதன் மற்றும் நகராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் - கமலாலயக் குளத்தில் படகு சவாரி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தொடங்கி வைத்தார்!

நாமக்கல், ஆக. 25 -

நாமக்கல் கமலாலய குளத்தில் அமைக்கப்பட்டுள்ள படகு சவாரியை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தொடங்கி வைத்தார்.

நாமக்கல் நகரின் மையபகுதியில் மலைக்கோட்டைக்கு தென்கிழக்கில் கமலாலய குளம் உள்ளது. வரலாற்றுச் சிறப்பு பெற்ற கமலாலய குளத்தில் பொதுமக்களின் பொழுதுபோக்கு அம்சமாக குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை செல்லும் வகையில் படகு சவாரி அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் சவாரிக்காக 7 படகுகள் உள்ளன.

கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வந்த நிலையில் குளத்தில் தண்ணீர் குறைந்ததாலும், அதைத் தொடர்ந்து கொரோனா பரவல் காரணமாகவும் படகு சவாரி நிறுத்தம் செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த மாதம் பூங்காவை சீரமைக்கும் பணி நடைபெற்று குளத்தில் படகு சவாரி செய்ய முன் ஏற்பாடுகளை செய்து வந்தனர்.

அதற்காக கேரளாவில் இருந்து ரூ. 16 லட்சம் ரூபாய் மதிப்பில் தயாரிக்கப்பட்ட, 4 பெடல் படகுகள், ஒரு விசை படகு தயாரிக்கப்பட்டு, லாரிகள் மூலம் நாமக்கல்லுக்கு கொண்டு வரப்பட்டது.

இதில் 4 மிதி படகுகளும், 8 பேர் அமர்ந்து செல்லும் வகையில் மோட்டார் படகு ஒன்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உள்ளது.

படகு சவாரி தொடக்க விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு படகு சவாரியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் ஆர்.மகேஸ்வரி, நகரக் கழகச் செயலாளர் ராணா ஆனந்த், சிவகுமார், பொறியாளர் சண்முகம், ஒப்பந்ததாரர் வடிவேல்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அனைவரும் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர்.

மேலும், பொழுதுபோக்கு பூங்காவில் குழந்தைகளுக்கான பேட்டரி வாகனங்களும் தொடங்கி வைக்கப்பட்டன. இந்த படகு சவாரி காலை 10 மணி முதல் மாலை 6.30 வரை மட்டுமே அனுமதிக்கப்படுகிறது.

படகுகளில் செல்வோர் ‘லைப் ஜாக்கெட்’ எனப்படும் பாதுகாப்பு உடை அணிந்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# திருப்பத்தூர் மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ, அறிவிப்பு

திருப்பத்தூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் தம்புராஜ் மறைவெய்திய காரணத்தால், ஜெ.ஞானவேல் (2/48, ஜெய்பீம் நகர், பாச்சல் & அஞ்சல், திருப்பத்தூர்மாவட்டம்-635602) அவர்கள்திருப்பத்தூர் மாவட்டஆதிதிராவிடர்நலக்குழுதுணைஅமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகளுடன் இணைந்து இவர், கழகப் பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

# திருநெல்வேலி மாநகரம், மேலப்பாளையம் பகுதி, 54வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்டம், மேலப்பாளையம் பகுதி, 54வது வட்டச் செயலாளர் கே.பி.ஜான்கென்னடி அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **ஜி.வினோத் குமார்**, (12,அழகர் நகர், NGO-A காலனி, திருநெல்வேலி - 627007.)அவர்கள்54வதுவட்டக்கழகப்பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### புதுச்சேரி மாநில

# இளைஞர் அணி நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## அமைப்பாளர் இரா.சிவா பங்கேற்றார்!

புதுச்சேரி, ஆக. 25 -

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, 100 இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்யும் பொருட்டு, தி.மு.க. தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கலைஞரின் “என் உயிரினும் மேலான”..! என்ற தலைப்பில் தொடங்கி என்றென்றும் பெரியார். ஏன்?. அண்ணா கண்ட மாநில சுயாட்சி, கலைஞரின் தொலைநோக்குப் பார்வை, கலைஞர், கலைஞர் - நவீன நாட்டின் சிற்பி, இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம், சமூக நீதிக் காவலர் கலைஞர், தமிழ்நாடு குடும்ப ங்களில் தி.மு.க., போன்ற பல்வேறு தலைப்புகளில் பேச்சுப் போட்டி நடத்திட அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் புதுச்சேரி மாநில இளைஞர் அணி சார்பில் பேச்சுப் போட்டி நடத்துவது குறித்த அவசர ஆலோசனைக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமை அலுவலகத்தில் நேற்று காலை 11.30 மணிக்கு நடந்தது.

கூட்டத்திற்கு மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., தலைமை வகித்தார்.

மாநில கழக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா கலந்து கொண்டு பேச்சுப் போட்டிகளை எப்படி நடத்துவது குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

கூட்டத்தில், புதுச்சேரி மாநிலத்தில் 26-ஆம் தேதி திங்கள்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 4.00 மணிவரை புஸ்சி வீதியில் உள்ள ரோஷ்மா திருமண நிலையத்தில் நடத்துவது என்றும் இப்போட்டியில் புதுச்சேரியில் உள்ள கல்லூரிகளைச் சேர்ந்த 300 மாணவ, மாணவியர்கள் பங்கேற்க வைப்பது என்றும் இப்போட்டிக்கு தலைமைக் கழகத்தால் நிய மிக்கப்படும் நிர்வாகிகள் நடுவர்களாக இருந்து சிறப்பாக பேசும் மாணவர்களை தேர்வு செய்து தமிழ்நாடு அளவில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் பங்கேற்க செய்து அவர்கள் மாநில அளவில் வெற்றி பெற வைத்து புதுச்சேரிக்கு பெருமை சேர்க்க வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில், மாநில மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.பி. மணிமாறன், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டாக்டர் நித்திஷ், முகிலன், ரெமிஎட்வின், உத்தமன், தாமரைக்கண்ணன், கிருபாசங்கர், அகிலன், தமிழ்பிரியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டம் பொய்யுண்டார் கோட்டை ஊராட்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற மக்கள் நேர்காணல் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் .பா. பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ஆகியோர் கலைஞரின் கனவு இல்லம் திட்ட ஆணையினை பயனாளிகளுக்கு வழங்கினர். மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி உஷாபுண்ணியமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், உதவி ஆட்சியர் பயிற்சி உத்கர்ஷ் குமார், ஒன்றியக்குழு தலைவர் பார்வதி சிவசங்கர் மற்றும் பலர் உடன் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூரில்நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். உடன் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன்,வட்டாட்சியர் தனலட்சுமி, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன் ,சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவ சண்முகம் , சையத்முகமது ஆகியோர் உள்ளனர்.




நாகை மாவட்டம் நாகை ஒன்றியம் ஆழியூர் ஊராட்சியில் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என். கௌதமன் கலந்து கொண்டு பேசினார். உடன் நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். செல்வராஜ், ஊராட்சி மன்ற தலைவர் மணிமேகலை முருகேசன் மற்றும் பலர் உள்ளனர்.